Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com RNI No.TNBIL/2021/81709 தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact :
98413 59935

மலர் 2 | சென்னை | தினசரி | 4 பக்கம் | செவ்வாய்கிழமை, அக்டோபர் 18, 2022 | 4 பக்கங்கள் | ரூ.2/- | இதழ் 96

# எதிர்க்கட்சி துணைத் தலைவர் விவகாரம்: எடப்பாடி பழனிசாமி, எம்.எல்.ஏ.க்கள், சட்டசபையிலிருந்து வெளியேற்றம்



சென்னை, அக்டோபர் 18 2022: தமிழக சட்டசபையின் எதிர்க்கட்சி துணைத் தலைவராக ஆர்.பி.உதயகுமார் நியமனத்தை அங்கீகரிக்க கோரி எடப்பாடி பழனிசாமி தரப்பு ஆதரவு எம்.எல்.ஏ.க்கள் சட்டசபையில் முழக்கங்களை எழுப்பி அமளியில் ஈடுபட்டனர். இதனால் அவர்கள் சபையிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.

அண்ணா தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் காலை 9.25 மணிக்கு சட்டசபை வளாகத்துக்கு வந்தனர். எடப்பாடி பழனிசாமி அவரது அறையில் அமர்ந்து இருக்க மற்ற அண்ணா தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் சட்டசபை வளாகத்தில் சபாநாயகர் அப்பாவுவை சந்தித்தனர். அப்போது எதிர்க்கட்சி துணைத் தலைவராக ஓ.பன்னீர்செல்வத்துக்கு பதிலாக ஆர்.பி. உதயகுமாரை நியமிக்க கோரியதை அங்கீகரிக்க வலியுறுத்தினர்.

அப்போது எதிர்க்கட்சி துணைத் தலைவர் யார் என்பதை சட்டசபையில் அறிவிப்பதாக எடப்பாடி பழனிசாமி தரப்பு எம்.எல்.ஏ.விடம் சபாநாயகர் அப்பாவு தெரிவித்தார்.

அருகருகே

எடப்பாடி, ஓ.பி.எஸ்.

இதைத்தொடர்ந்து சபாநாயகர் சொன்ன விஷயத்தை எடப்பாடி பழனிசாமியிடம் சென்று அண்ணா தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் தெரிவித்தனர். அதன் பிறகு அவர் உள்பட அனைத்து அண்ணா தி.மு.க. எம்.எல்.ஏ.க்களும் சட்டசபைக்குள் வந்தார்கள்.

அருகருகே எடப்பாடி, ஓ.பி.எஸ்.

அதற்கு முன்னதாகவே சட்டமன்ற எதிர்க்கட்சி துணைத்தலைவரான ஓ.பன்னீர்செல்வம், வைத்திலிங்கம், மனோஜ் பாண்டியன், அய்யப்பன் ஆகிய 4 பேரும் சபையில் அமர்ந்திருந்தனர். சபை தொடங்கும் சமயத்தில் எடப்பாடி பழனிசாமி வேகமாக வந்து ஓ.பன்னீர்செல்வத்தின் அருகே தனது இருக்கையில் அமர்ந்தார். இருவரும் பரஸ்பர வணக்கம் கூட தெரிவிக்கவில்லை. அருகருகே அமர்ந்திருந்தாலும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொள்ளவில்லை. அவர்களுக்கு எதிரே முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உள்ளிட்ட அமைச்சர்கள், தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் அமர்ந்திருந்தனர்.

10 மணிக்கு சபாநாயகர் அப்பாவு வந்ததும் 2வது நாளாக சபை நடவடிக்கைகள் தொடங்கின.

எடப்பாடி கேள்வி

முதல் நிகழ்ச்சியாக கேள்வி நேரம் எடுத்துக்கொள்ளப்பட்டது. இந்த சமயத்தில் எல்லோரும் அமர்ந்திருக்க எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி எழுந்து இருக்கை விவகாரம் தொடர்பாக நாங்கள் கொடுத்த கடிதத்தின் மீது ஏன் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று கேள்வி கேட்டார்.

உடனே சபாநாயகர், நான் இப்போது கேள்வி நேரத்துக்கு அனுமதித்துள்ளேன். எனவே உட்காருங்கள். கேள்வி நேரம் முடிந்ததும் உங்களுக்கு பேச வாய்ப்பு தருகிறேன் என்றார்.

ஆனால் எடப்பாடி பழனிசாமி தான் சொன்ன கருத்தை சபாநாயகரிடம் மீண்டும் மீண்டும் வலியுறுத்தினார். அப்போது எடப்பாடி பழனிசாமிக்கு மைக் இணைப்பு கொடுக்கப்படாததால் அண்ணா தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் எல்லோரும் எழுந்து நின்றனர்.

எடப்பாடி பழனிசாமிக்கு மைக் இணைப்பு கொடுங்கள் என்று உரத்த குரலில் தெரிவித்தனர். ஆனால் மைக் இணைப்பு கொடுக்கப்படவில்லை. தொடர்ந்து எடப்பாடி பழனிசாமி தான் சொன்ன கருத்தை திரும்ப திரும்ப வலியுறுத்தி பேசினார்.

அப்போது அமைச்சர் துரைமுருகன் குறுக்கிட்டு. 'சட்டசபையில் கேள்வி நேரம் என்பது மிக முக்கியமானது. சபாநாயகர் கேள்வி நேரத்தை அனுமதித்த பிறகு நீங்கள் இப்படி பேசுவது முறையல்ல' என்றார்.

அமளி

ஆனாலும் அண்ணா தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் சட்டசபையில் எழுந்து நின்று சபாநாயகருக்கு எதிராக முழக்கம் எழுப்ப தொடங்கினார்கள். இதனால் சட்டசபையில் அமளி ஏற்பட்டது. அமளிக்கு இடையே சபாநாயகர் அனைவரிடமும் உட்காரும்படி கூறினார். எந்த பிரச்சினையாக இருந்தாலும் அதற்கு பதில் சொல்ல தயாராக இருக்கிறேன். ஆனால் கேள்வி நேரத்தின் போது சமரசம் செய்துகொள்ள மாட்டேன். கேள்வி நேரத்துக்கு பிறகு உங்கள் பிரச்சினையை சொல்லுங்கள் பதில் சொல்கிறேன்' என்றார்.

ஆனாலும் எடப்பாடி பழனிசாமி தொடர்ந்து நின்றுகொண்டே பேசினார்.

அப்போது மீண்டும் சபாநாயகர் அப்பாவு எழுந்து, "நீங்கள் பேசும் எதுவும் அவைக் குறிப்பில் பதிவு செய்யப்படாது. நீங்கள் முதலமைச்சராக இருந்திருக்கிறீர்கள். உங்களுக்கு தெரியாதது அல்ல. சட்டசபை விதி என்ன சொல்கிறதோ அதைத்தான் செய்வேன். ஆனால் நான் சொல்வதை நீங்கள் கேட்பதாக தெரியவில்லை. நீங்கள் களங்கம் விளைவிக்க இங்கு வந்தீர்களா? உங்கள் நடவடிக்கை அப்படித்தான் தெரிகிறது. ஏற்கனவே 1988ம் ஆண்டு ஜானகி அம்மாள் பதவி பிரமாணத்தின் போதும் இதேபோல் தான் செய்தீர்கள். எனவே சபை அமைதியாக நடைபெற ஒத்துழையுங்கள். பிரச்சினை செய்யாதீர்கள், நான் உங்களுக்கு பேசுவதற்கு நேரம் கொடுக்கிறேன். கேள்வி நேரம் முடிந்ததும் எதிர்க்கட்சி துணைத்தலைவர் விவகாரம் குறித்து விளக்கம் அளிக்கிறேன்என்றார்.

ஆனாலும் எடப்பாடி பழனிசாமி அவரது இருக்கையில் அமராமல் நின்றுகொண்டே பேசினார்.

மீண்டும் சபாநாயகர் எழுந்து, சபையின் மாண்பை குலைக்க அனுமதிக்க மாட்டேன். மக்கள் பிரச்சினையை பற்றி பேசத்தான் இந்த அவை. ஆனால் மக்கள் பிரச்சினை பற்றி பேச நீங்கள் தடையாக இருக்கிறீர்கள். பேரவை விதி 22ல் என்ன சொல்லப்பட்டுள்ளது என்றால் முதல் ஒரு மணிநேரம் கேள்வி நேரம் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்று உள்ளது. நீங்கள் கொண்டு வந்த விதியை நீங்களே மீறலாமா? மக்கள் பிரச்சினைக்கு முக்கியத்துவம் கொடுங்கள்' என்றார்.

ஆனால் தொடர்ந்து எடப்பாடி பழனிசாமி தரப்பு ஆதரவு எம்.எல்.ஏ.க்கள் அமளியில் ஈடுபட்டனர்.

துரைமுருகன் குற்றச்சாட்டு

அமைச்சர் துரைமுருகன்:- சபாநாயகர் எவ்வளவோ சொல்லியும் அண்ணா தி.மு.க. உறுப்பினர்கள் கேட்கவில்லை. சட்டசபையில் இன்று ஜெயலலிதா மரணம் தொடர்பான நீதிபதி ஆறுமுகசாமி ஆணைய அறிக்கை, தூத்துக்குடி துப்பாக்கி சூடு சம்பந்தமான அறிக்கை, இந்தி எதிர்ப்பு தீர்மானம் ஆகியவை தாக்கல் செய்யப்படுகிறது. எனவே இதை தவிர்ப்பதற்காக நீங்கள் சபையில் அமளி ஏற்படுத்துவதாக தெரிகிறது. இதை சபாநாயகர் அனுமதிக்க கூடாது' என்றார்.

தர்ணா

அப்போது அண்ணா தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் கோஷமிட்டபடி சபாநாயகர் இருக்கை முன் அமர்ந்து தர்ணாவில் ஈடுபட்டனர்.

அப்போது 'இருக்கைக்கு செல்லாவிட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்' என சபாநாயகர் எச்சரிக்கை விடுத்தார்.

தொடர்ந்து எடப்பாடி பழனிசாமி ஆதரவு எம்.எல்.ஏ.க்கள் அமளியில் ஈடுபட்டதால், அவர்களை சட்டசபையிலிருந்து வெளியேற்ற அவை காவலர்களுக்கு சபாநாயகர் அப்பாவு உத்தரவிட்டார்.

இதை தொடர்ந்து சபை காவலர்கள் எடப்பாடி பழனிசாமி ஆதரவு எம்.எல்.ஏக்கள் சட்டசபையிலிருந்து வெளியேற்றப்பட்டனர். அப்போது சட்டசபை வாயிலிலும் நின்றபடி சில எம்.எல்.ஏக்கள் கோஷமிட்டனர். அவர்களையும் அங்கிருந்து வெளியேற்றினார்கள்.

இதைத் தொடர்ந்து அண்ணா தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் அனைவரும் சட்டசபை நிகழ்ச்சியில் பங்கேற்க தடை விதித்து சபாநாயகர் அப்பாவு உத்தரவிட்டார். இது தொடர்பாக சட்டசபையில் அவர் வெளியிட்ட அறிவிப்பில் அண்ணா தி.மு.க. உறுப்பினர்கள் அவையின் மாண்பை குலைக்கும் வகையில் நடந்து கொண்டதால் இன்றும், நாளையும் அவர்கள் பங்கேற்க முடியாது என்று தெரிவித்தார்.

ஒரு நாள் தடை

இதையடுத்து பேசிய அவை முன்னவர் துரைமுருகன், அண்ணா தி.மு.க. உறுப்பினர்களுக்கு 2 நாள் தடை என்பது அதிகபட்சம் என்று கருதுகிறேன். சபாநாயகர் முடிவில் நான் தலையிட முடியாது என்றாலும் அவர்களுக்கான 2 நாள் தடையை இன்று ஒருநாள் மட்டும் குறைக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

இதனை சபாநாயகர் அப்பாவு ஏற்றார். இதையடுத்து அண்ணா தி.மு.க. உறுப்பினர்களுக்கு இன்று ஒருநாள் தடை விதிப்பது தொடர்பான தீர்மானம் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டது. அதனை துரைமுருகன் வாசித்தார்.

இதனையடுத்து அவை முன்னவரின் கோரிக்கையை ஏற்று இன்று ஒரு நாள் மட்டும் எடப்பாடி பழனிசாமி தரப்பு எம்.எல்.ஏ.க்கள் சட்டசபை நிகழ்வுகளில் தடை விதிக்கப்படுகிறது என சபாநாயகர் தெரிவித்தார்.

# சென்னை பெருநகர காவல் ஆணையாளர் ஜூடோ மற்றும் கபடி போட்டிகளில் பதக்கங்கள் வென்ற சென்னை பெருநகர ஆண் மற்றும் காவல் ஆளிநர்களை நேரில் அழைத்து பாராட்டினார்



சென்னை, அக்டோபர் 18 2022: கடந்த 19.09.2022 முதல் 24.09.2022 வரை புதுடில்லியில் நடைபெற்ற காவல் துறையினருக்கான 7வது அகில இந்திய காவல் ஜூடோ கிளஸ்டர் சாம்பியன் ஷிப் -2022 விளையாட்டு போட்டியில் தமிழ்நாடு காவல் துறை சார்பாக சென்னை பெருநகர காவல் வி-5 திருமங்கலம் காவல் நிலைய பெண் உதவி ஆய்வாளர் எம்.சாமியா சுல்தானா கலந்து கொண்டு வெள்ளிப்பதக்கமும், ஆயுதப்படை பெண் காவலர் எஸ். அனுஷா, (பெ.கா.எண்.54398) வெண்கல பதக்கமும் வென்றுள்ளனர்.

மேலும் கடந்த 25.09.2022 முதல் 01.10.2022 வரை குஜராத் மாநிலத்தில் நடை பெற்ற 36வது தேசிய கபடி போட்டியில் தமிழ்நாடு காவல் துறை சார்பாக சென்னை பெருநகர காவல் ஜெ-13 தரமணி காவல் நிலைய முதல் நிலை பெண் காவலர் பி.நதியா, (மு.நி.கா.33015) ஆயுதப்படை பெண் காவலர்கள் கே.ஸ்வேதா, (பெ.கா.எண்.54300), பி. சித்ரா, (பெ.கா.எண்.54303) ஆகியோர் வெண்கல பதக்கங்களை வென்றுள்ளனர்.

தொடர்ந்து, கடந்த 06.10.2022 முதல் 09.10.2022 வரை திருச்சியில் நடைபெற்ற தமிழ்நாடு ஜூடோ அசோசியேஷன் நடத்தும், சீனியர் ரேங்கிங் ஜூடோ போட்டி மற்றும் மாநில நடுவர் பயிற்சி மாநாட்டில், சென்னை பெருநகர காவல் ஆயுதப்படையைச் சேர்ந்த பெண் காவலர்கள் கோப்பெருந்தேவி (பெ.கா.54891), ஜோதிமணி (பெ.கா.57051), விஜயலஷ்மி (பெ.கா.56948) மற்றும் காவலர் மகேஷ்குமார் (கா.50136) ஆகியோர் 2 வெள்ளி பதக்கங்கள் மற்றும் 2 வெண்கல பதக்கங்கள் பெற்றனர். மேலும், தலைமைக் காவலர் ராஜு (த.கா.36228), முதல்நிலை காவலர் ராஜலிங்கம், (மு.நி.கா.33084) மற்றும் காவலர் நந்தகுமார் (கா.48503) ஆகியோர் நடுவருக்கான பயிற்சி மாநாட்டில் சிறப்பாக பங்கேற்று முதல் மதிப்பிற்கான சான்றிதழ்கள் பெற்றனர். மேலும், 01.09.2022 முதல் 05.09.2022 வரை, கேரள மாநிலம், திருச்சூரில் நடைபெற்ற தேசிய கேலோ பெண்கள் ஜூடோ போட்டியில், ஆயுதப்படை பெண் காவலர் அர்ச்சனா (பெ.கா.54895) என்பவர் கலந்து கொண்டு சான்றிதழ் பெற்றார்.

சென்னை பெருநகர காவல் ஆணையாளர் திரு.சங்கர் ஜிவால், இ.கா.ப. அவர்கள் மேற்படி விளையாட்டு போட்டிகளில் கலந்து கொண்டு பதக்கங்களை பெற்ற சென்னை பெருநகர காவல் ஆண் மற்றும் பெண் காவல் ஆளிநர்களை இன்று (18.10.2022) காவல் ஆணையரகத்திற்கு நேரில் அழைத்து பாராட்டி குழு புகைப்படம் எடுத்துக் கொண்டார்.

இந்நிகழ்ச்சியின்போது, கூடுதல் ஆணையாளர் (தலைமையிடம்) முனைவர்.ஜெ.லோகநாதன், உடனிருந்தார்.

# 2022-க்கான புக்கர் பரிசை வென்றார் இலங்கை எழுத்தாளர் சேகன் கருணாதிலக



சென்னை, அக்டோபர் 18 2022: 2022-க்கான புக்கர் பரிசை இலங்கையை சேர்ந்த எழுத்தாளரான சேகன் கருணாதிலக வென்றுள்ளார். ஆண்டுதோறும் சிறந்த நாவல் படைப்புக்காக வழங்கப்படும் இலக்கிய விருது இது. 'The Seven Moons of Maali Almeida' என்ற நாவல் படைப்புக்காக அவர் புக்கர் பரிசை வென்றுள்ளார்.

கடந்த 1990-களில் இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டு போர் தான் இதன் களம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. 47 வயதான அவர் எழுதியுள்ள மூன்றாவது நாவல் இதுவாகும். இலங்கையின் தெற்கு பகுதியில் உள்ள காலே நகரில் பிறந்தவர்.

நியூசிலாந்தில் படித்து, லண்டன் போன்ற வெளிநாட்டு நகரங்களில் பணியாற்றிய அனுபவம் கொண்டவர்.

இங்கிலாந்து ராணி கமிலா, அவருக்கு புக்கர் விருதை வழங்கி சிறப்பு சேர்த்துள்ளார். அவருக்கு 50 ஆயிரம் பவுண்டுகள் பரிசு தொகையாக வழங்கப்பட்டுள்ளது. மொத்தம் 6 படைப்புகள் இந்த விருதுக்கான பரிந்துரையில் இந்த முறை இருந்தது. இதனை 5 பேர் அடங்கிய நடுவர் குழு பரிசீலித்து வெற்றியாளரை அறிவித்தது.

அருந்ததி ராய், கிரண் தேசாய், அரவிந்தா ஆகிய இந்தியர்கள் இந்த பரிசை வென்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தூத்துக்குடி துப்பாக்கிச்சூடு சம்பவம்: கலெக்டர், 17 போலீசார் மீது நடவடிக்கை எடுக்க அருணா ஜெகதீசன் அறிக்கை பரிந்துரை



சென்னை, அக்டோபர் 18 2022: தூத்துக்குடி துப்பாக்கிச்சூடு தொடர்பாக அமைக்கப்பட்ட ஓய்வு பெற்ற நீதிபதி அருணா ஜெகதீசன் அறிக்கை சட்டசபையில் இன்று தாக்கல் செய்யப்பட்டது. அதில் கலெக்டர் மற்றும் 17 போலீசார் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்க பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

தூத்துக்குடியில் உள்ள ஸ்டெர்லைட் ஆலையை நிரந்தரமாக மூடக்கோரி அப்பகுதி மக்கள் 2018ம் ஆண்டு மே மாதம் 22ம் தேதி நடைபெற்ற போராட்டம் வன்முறையில் முடிந்தது. வன்முறை மற்றும் போலீஸ் துப்பாக்கிச் சூட்டில் 13 பேர் உயிரிழந்தனர். நூற்றுக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இந்த துப்பாக்கி சூடு சம்பவம் தொடர்பாக ஓய்வு பெற்ற ஐகோர்ட் நீதிபதி அருணா ஜெகதீசன் தலைமையிலான ஒருநபர் ஆணையம் விசாரணை நடத்தியது. இந்த ஆணையத்தின் 133 பக்க பரிந்துரை கடந்த சில நாட்களுக்கு முன்னர் தமிழக அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த ஆணையம் நடத்திய விசாரணை அறிக்கை இன்று சட்டசபையில் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த அறிக்கையில் துப்பாக்கிச்சூடு நடத்துவதற்கு முன்பு போராட்டக்காரர்களை எச்சரிக்க பயன்படுத்தும் Public Addressing System (Ü) நன்றாக கேட்கக்கூடிய மெகா போன் மூலமாக எச்சரிக்கை செய்யப்படவில்லை என அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போலீசார் அத்துமீறல்

துப்பாக்கிச்சூடு சம்பவத்தின்போது போராட்டக்காரர்களை ஒடுக்குவதாக எண்ணி போலீசார் வரம்பு மீறி செயல்பட்டுள்ளனர்.

போலீஸ்காரர் சுடலைக்கண்ணு மட்டும் 17 ரவுண்டுகள் துப்பாக்கியால் சுட்டுள்ளார். போராட்டம் நடத்தியவர்கள் மீது பூங்காவில் மறைந்திருந்து போலீசார் துப்பாக்கியால் சுட்டுள்ளனர்.

தூத்துக்குடி மாவட்ட கலெக்டர் மற்றும் 3 வருவாய்த்துறை அலுவலர்கள் மீது துறை சார்ந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும் துப்பாக்கி சூடு சம்பவம் தொடர்பாக உயிரிழந்தவர்களின் உறவினர்கள், சட்டப்பூர்வ வாரிசுகளுக்கு ரூ.50 லட்சம் இழப்பீடு தொகை வழங்க வேண்டும் என கூறியுள்ளது.

இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்
ALL ONLINE SERVICES

"printed by R.SATHYANARAYANAN and published by R.SATHYANARAYANAN on behalf of R.SATHYANARAYANAN and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor R.SATHYANARAYANAN"

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com RNI No.TNBIL/2021/81709 தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# தீவிரவாதம், போதைப் பொருள் தடுப்பு: டெல்லி, அரியானா, பஞ்சாப் உள்ளிட்ட 40 இடங்களில் மீண்டும் என்ஐஏ சோதனை




சென்னை, அக்டோபர் 18 2022: பயங்கரவாதம் - போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கையாக தலைநகர் டெல்லியின் என்சிஆர் பகுதி உள்பட பஞ்சாப், அரியானா உள்பட 6 வட மாநிலங்களில் 40-க்கு மேற்பட்ட இடங்களில் இன்று அதிகாலை முதல் என்ஐஏ சோதனை நடைபெற்று வருகிறது.

இந்தியாவிலும் வெளிநாட்டிலும் பயங்கரவாதிகள், குண்டர்கள் மற்றும் போதைப்பொருள் கடத்தல்காரர்கள்/கடத்தல்காரர்களுக்கு இடையே உருவாகி வரும் தொடர்பைத் தகர்க்க, தேசிய புலனாய்வு அமைப்பு (என்ஐஏ) இன்று பஞ்சாப், அரியானா, ராஜஸ்தான் மற்றும் டெல்லி-என்சிஆர் பகுதியில் பல இடங்களில் சோதனை நடத்தி வருகிறது.

இந்தியா மற்றும் வெளிநாடுகளை மையமாக கொண்டு பயங்கரவாதிகள் மற்றும் போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கு இடையே வளர்ந்து வரும் தொடர்பை உடைக்கும் விதமாக, இந்த சோதனை நடத்தப்பட்டதாக கூறப்படுகிறது. மேலும், இந்த கும்பல் தீவிரவாத செயல்களில் ஈடுபட திட்டமிட்டுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

ஏற்கனவே, கடந்த செப்டம்பர் 12 ஆம் தேதி, பஞ்சாப், அரியானா, ராஜஸ்தான், டெல்லி மற்றும் என்சிஆர் பகுதிகளில் உள்ளிட்ட 50 இடங்களில் என்ஐஏ சோதனைகளை நடத்தியது. அதன் அடுத்தக்கட்ட நடவடிக்கையாக இன்று மீண்டும் சோதனை நடத்தி வருகிறது.

# ஆர்.எஸ்.எஸ் அணிவகுப்புக்கு அனுமதி; திருமாவளவனின் மறு ஆய்வு மனு: சென்னை உயர்நீதிமன்றம் தள்ளுபடி



சென்னை, அக்டோபர் 18 2022: ஆர்.எஸ்.எஸ். அணிவகுப்புக்கு அனுமதியளித்து பிறப்பித்த உத்தரவை மறு ஆய்வு செய்யக் கோரி விடுதலை சிறுத்தைகள் தலைவர் திருமாவளவன் தாக்கல் செய்த மனுவை தள்ளுபடி செய்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

தமிழ்நாட்டில் அக்டோபர் 2ம் தேதி ஆர் எஸ் எஸ் அணிவகுப்பு ஊர்வலத்திற்கு அனுமதி

அளிக்கும்படி பல்வேறு நிபந்தனைகளை விதித்து சென்னை உயர்நீதிமன்றம் செப்டம்பர் 22ஆம் தேதி உத்தரவு பிறப்பித்து இருந்தது. இந்த உத்தரவை மறு ஆய்வு செய்யக்கோரி விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார். இந்த மனுவை நீதிபதி இளந்திரையன் விசாரித்தார்.

தள்ளுபடி செய்த நீதிபதி அப்போது திருமாவளவன் தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர், மத நல்லிணக்கம், சட்டம் - ஒழுங்கு பிரச்னை சம்பந்தப்பட்டுள்ளதால் மறு ஆய்வு கோர உரிமை உள்ளதாக வாதிட்டிருந்தார். மேலும், அணிவகுப்புக்கு அனுமதி கோரியது என்பது உரிமையியல் பிரச்னை எனவும், அதை சம்பந்தப்பட்ட நீதிபதி முன் விசாரணைக்கு பட்டியலிட்டிருக்க வேண்டும் எனவும், மாறாக குற்றவியல் வழக்காக விசாரிக்க உகந்ததல்ல எனவும், அதனால் அந்த வழக்கில் பிறப்பித்த உத்தரவுகளை மறு ஆய்வு செய்ய வேண்டும் எனவும் திருமாவளவன் தரப்பில் வாதிடப்பட்டது.

காவல் கண்காணிப்பாளரையோ, காவல் ஆணையரையோ எதிர்மனுதாரராக சேர்ப்பதால் மட்டும் உரிமையியல் வழக்கை, குற்றவியல் வழக்காக கருத முடியாது எனவும் வாதிடப்பட்டது. இந்த வாதங்களைக் கேட்ட நீதிபதி இளந்திரையன் , விசிக தலைவர் திருமாவளவன் தாக்கல் செய்த மனு மீதான உத்தரவை தேதி குறிப்பிடாமல் தள்ளிவைத்திருந்தார்.

இந்த வழக்கில் இன்று தீர்ப்பளித்த நீதிபதி இளந்திரையன், கடந்த செப்டம்பர் மாதம் பிறப்பித்த உத்தரவை மறு ஆய்வு செய்ய மறுத்து, திருமாவளவன் தாக்கல் செய்த மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டார்.

# எதிர்க்கட்சி துணை தலைவர் பதவியே இல்லை: சபாநாயகர் அப்பாவு விளக்கம்



சென்னை, அக்டோபர் 18 2022: சட்டசபை விதிப்படி எதிர்க்கட்சி துணை தலைவர் பதவியே இல்லை' எனவும், □ ஒருவரை இந்த இருக்கையில் அமர வைக்கக்கூடாது என கூற யாருக்கும் உரிமை இல்லை' என்றும் சபாநாயகர் அப்பாவு தெரிவித்தார்.

எதிர்க்கட்சி துணை தலைவர் விவகாரம் குறித்து சட்டசபையில் சபாநாயகர் அப்பாவு விளக்கம் அளித்து பேசினார்.

அப்போது அவர் கூறியதாவது:ழீ

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்டதன் அடிப்படையில் உறுப்பினர்கள் அமர்ந்துள்ளனர். சபை மரபுப்படியே இருக்கைகள் ஒதுக்கப்பட்டுள்ளன. ஆர்.பி.உதயகுமாரை எதிர்க்கட்சி துணை தலைவராக நியமிக்கவும், ஆய்வுக்குழுவில் உதயகுமாரை சேர்க்கும்படியும் பழனிசாமி தரப்பினர் கோரிக்கை விடுத்தனர். ஆனால், விதிப்படி எதிர்க்கட்சி துணைத்தலைவர் என்ற பதவியே இல்லை. எதிர்க்கட்சி துணைத்தலைவரை அங்கீகரிக்க வேண்டிய கட்டாயம் இல்லை.

அலுவல் ஆய்வு குழு உறுப்பினர் நியமனத்தில் சபாநாயகருக்கே முழு அதிகாரம் உள்ளது. தேர்தல் ஆணைய பதிவேட்டில் இன்னும் ஒருங்கிணைப்பாளராக பன்னீர்செல்வம் பெயரும், இணை ஒருங்கிணைப்பாளராக பழனிசாமி பெயரும் உள்ளது.

இது தொடர்பான வழக்குகள் நிலுவையில் உள்ளதாகவும் பன்னீர்செல்வம் கடிதத்தில் குறிப்பிட்டார். இருவரின் வலியுறுத்தல்களும் சரி. ஆனால் முடிவெடுக்க கூடிய அதிகாரம் சபாநாயகருக்கு மட்டுமே உள்ளது. எடுத்தோம், கவிழ்தோம் என எதையும் செய்யவில்லை. சபை முழு ஜனநாயகத்தோடு நடத்தப்பட்டு வருகிறது.

ஒரு உறுப்பினர் எனக்கு இந்த இடம் சவுகரியமாக இல்லை என கோரிக்கை விடுத்தால் மட்டுமே இருக்கை மாற்றப்படும். ஆனால், இந்த இருக்கையில் அவரை அமர வைக்கக்கூடாது என வேறொருவர் சொல்வதற்கு உரிமை இல்லை. முன்னாள் முதல்வர் கருணாநிதிக்கு வசதியான இருக்கை கேட்டபோது இந்த இடமே போதுமானது என அண்ணா தி.மு.க. ஆட்சியில் பதிலளித்தார்கள்.

இவ்வாறு அவர் விளக்கமளித்தார்.

# சசிகுமார் நடிப்பில் தயாராகும் பாடல்கள் எதுவும் இல்லாத 'நான் மிருகமாய் மாற' திரைப்படம் வரும் நவம்பர் மாதம் திரையரங்குகளில் வெளியாக உள்ளது



சென்னை, அக்டோபர் 18 2022: டி டி ராஜாவின் 'செந்தூர் பிலிம் இன்டர்நேஷனல்' தயாரிக்கும் 'நான் மிருகமாய் மாற' திரைப்படம் வரும் நவம்பர் மாதம் முதல் வாரத்தில் திரையரங்குகளில் வெளியாக உள்ளது. சத்திய சிவாவின் இயக்கத்தில், இயக்குனர் மற்றும் நடிகர் சசிகுமார் படத்தின் நாயகனாக நடித்துள்ளார்.

ஒரு சாதாரண மனிதன் சந்தர்ப்ப சூழ்நிலையால் எவ்வாறு மிருகமாக மாறுகிறான் என்பதே படத்தின் கதை.

மேலும் இந்தத் திரைப்படத்தில் சசிகுமார் ஒலி பொறியாளராக நடித்துள்ளார். ஒருவனின் வாழ்க்கையை எவ்வாறு ஒலி மாற்றுகிறது என்பதே படத்தின் திருப்புமுனையாக அமையும், என்று இயக்குனர் சத்ய சிவா தெரிவித்துள்ளார்.

படத்தின் வில்லனாக நடிகர் விக்ராந்த் நடித்துள்ளார்.

சசிகுமார் அவர்கள், "இப்படத்தின் தலைப்பு, திரைக்கதைக்கு பொருத்தமாக இருக்கும். ஒரு சாதாரண மனிதன் தன் வாழ்வில் நடக்கும் கசப்பான சம்பவங்களால் எவ்வாறு ஒரு மிருகமாக மாறுகிறான் என்பதே கதை", என்று கூறினார்.

படத்தில் சண்டை காட்சிகள் அதிகமாக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

படத்தின் நாயகியான ஹரிப்ரியாவிற்கு 'நான் மிருகமாய் மாற' திரைப்படம், செந்தூர் பிலிம் இன்டர்நேஷனல் உடன் இரண்டாவது, மற்றும் தமிழில் நான்காவது திரைப்படம் ஆகும். கர்நாடகத்தை சேர்ந்த இவர், இதற்கு முன்பாக 'வல்லக்கோட்டை', 'முரண்' மற்றும் 'வாராயோ வெண்ணிலாவே' போன்ற திரைப்படங்களில் நடித்துள்ளார்.

"எனது கன்னட திரைப்படமான 'பெல் பாட்டம்' கண்ட இயக்குனர், எனக்கு இந்த திரைப்படத்தில் நடிப்பதற்கான ஒரு வாய்ப்பு அளித்தார். படத்தின் கதை நன்றாக இருந்ததால் உடனடியாக ஒப்புக்கொண்டேன். தமிழிலிருந்து சிறிது காலம் ஒதுங்கி இருந்ததற்கு, கன்னடத்தில் நான் பரபரப்பாக இருந்ததே காரணம். தமிழில் கதைகள் கேட்டு வருகிறேன். நல்ல கதை இருந்தால் கண்டிப்பாக நடிப்பேன்", என்று அவர் கூறினார்.

சசிகுமார் பற்றி கூறுகையில், "நடிகர் மட்டுமல்லாது இயக்குனராகவும் இருப்பதனால், அவரிடமிருந்து நிறைய விஷயங்கள் மற்றும் நுணுக்கங்கள் கற்றுக் கொண்டேன். மேலும் தமிழில் மீண்டும் நடிப்பது மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது", என்று கூறினார்.

"படத்தில் நான் ஆனந்தி என்ற கதாபாத்திரத்தில், கணவன் மற்றும் குழந்தையை பாதுகாக்கும் ஒரு எதார்த்தமான இல்லத்தரசியாக நடித்துள்ளேன்", என்று கூறினார்.

இசையமைப்பாளர் ஜிப்ரான் படத்திற்கு பின்னணி இசை அமைத்துள்ளார்.

படத்தில் பாடல்கள் எதுவும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

"எனது போராட்டம் மற்றும் வலி உங்கள் அனைவருக்கும் தெரியும். அதனாலே நான் திரைப்படங்களில் இருந்து சிறிது காலம் ஒய்வு பெற்றேன். வாழ்வில் எதுவும் நிரந்தரம் அல்ல! எல்லாம் மாறும்! அதனை நான் இப்போது புரிந்து கொண்டேன் பக்குவம் மற்றும் நிதானம் தான் மிகவும் முக்கியமானது. ஓடிக்கொண்டே இருப்பது வாழ்க்கை அல்ல. நிதானமாக பிடித்தவற்றை செய்வது மிகவும் முக்கியமானது", என்று சசிகுமார் கூறினார்.

மேலும் அவர், தான் விரைவில் ஒரு இதிகாச படம் இயக்கவிருப்பதாகவும், அந்தப் படத்திற்கான திரைக்கதையை 'ஈசன்' திரைப்படம் வெளியானதற்கு பின்பு எழுதி முடித்ததாகவும் தெரிவித்தார்.

"இப்பொழுது வெளிவந்த பொன்னியின் செல்வன் மற்றும் பாகுபலிக்கு முன்னரே இந்தத் திரைப்படத்திற்கான பணி தொடங்கியது.

ஆனால் படத்தின் செலவு மிகவும் அதிகமாக இருந்ததால், அந்தக் காலகட்டத்தில் இந்த திரைப்படத்தினை எடுக்க முடியவில்லை. ஆனால் விரைவில் இந்த படத்தினை இயக்குவேன்", என்றும் அவர் தெரிவித்தார்.

மதுரையில் தங்கியிருப்பதை பற்றி பத்திரிகையாளர் கேள்வி எழுப்புகையில் அவர் கூறியதாவது, "மதுரை எனது சொந்த ஊர். நான் எனது குடும்பத்துடன் அங்கு வசித்து வருகிறேன். மேலும் எனது திரைப்படத்தின் படப்பிடிப்பு மதுரை மற்றும் மதுரையை சார்ந்த பகுதிகளில் நடைபெறுகிறது. அங்கு தங்கி இருப்பது மிகவும் எளிதாக உள்ளது.

இங்கே ஒரு டப்பிங் ஸ்டூடியோ இருப்பதனால், என் கிராமத்தில் தங்கி வேலை செய்வது எனக்கு மிகவும் சவுகரியமாக உள்ளது. எனவே சென்னைக்கு வரவேண்டிய கட்டாயம் இருந்தால் மட்டுமே நான் வருவேன்", என்று கூறினார்.

ராஜா பட்டச் சார்ஜி இந்த படத்தின் ஒளிப்பதிவை செய்துள்ளார், மற்றும் ஸ்ரீகாந்த் என் பி , படத்தொகுப்பு பணிகளை மேற்கொண்டுள்ளார்.

படத்திற்கான தணிக்கை சான்றிதழ் விரைவில் வழங்கப்பட்டு, இந்தத் திரைப்படம் நவம்பர் மாதம் முதல் வாரத்தில் திரையரங்குகளில் வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

படக்குழுவினர் விவரம் நடிகர்கள் • எம் சசிகுமார் • ஹரிப்ரியா • விக்ராந்த் தொழில்நுட்பக் குழுவினர் இயக்குனர்: சத்யசிவா தயாரிப்பாளர்: டி டி ராஜா மற்றும் டி ஆர் சஞ்சய் குமார் தயாரிப்பு நிறுவனம்: செந்தூர் பிலிம் இன்டர்நேஷனல் ஒளிப்பதிவாளர்: ராஜா பட்டச்சார்ஜி இசை அமைப்பாளர்: ஜிப்ரான் கலை இயக்குனர்: உதயகுமார் படத்தொகுப்பாளர்: ஸ்ரீகாந்த் என் பி சண்டைக் காட்சி: மகேஷ் மேத்யூ வசனம் மற்றும் திரைக்கதை: சத்திய சிவா இணை இயக்குனர்: சிவராமகிருஷ்ணா பி ஆடை வடிவமைப்பாளர்: சங்கர் ஒப்பனை: மாரியப்பன் ஒளி வடிவமைப்பாளர்: பிரதாப் படங்கள்: முருகன் மற்றும் மணி விளம்பர வடிவமைப்பு: சிந்து கிராபிக்ஸ் வி எஃப் எக்ஸ்: வி கோர் ஸ்டுடியோஸ் இணை இயக்குனர்கள்: நிகேஷ் ஆர் மற்றும் மணிகண்டன் வி நிர்வாக தயாரிப்பாளர்: பாண்டியன் பி தமிழ் மக்கள் தொடர்பு: ரியாஸ் கே அஹமத் ஆடியோ லேபிள்: திங்க் மியூசிக் இந்தியா சன் டிவி மற்றும் சன் நெக்ஸ்ட் நிறுவனம் படத்தின் டிஜிட்டல் மற்றும் செயற்கைக்கோள் உரிமைகளை கைப்பற்றியுள்ளது.

# பாலியல் குற்றவாளிகளுக்கு பிரதமர் மோடி துணை நிற்கிறார்: ராகுல் காந்தி கடும் குற்றச்சாட்டு



சென்னை, அக்டோபர் 18 2022: பிரதமர் மோடி பாலியல் குற்றவாளிகளுடன் துணை நிற்கிறார் என காங்கிரஸ் எம்பி ராகுல் காந்தி குற்றம் சுமத்தியுள்ளது பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

குஜராத் மாநிலத்தில் கோத்ரா கலவரத்தின்போது பில்கிஸ் பானு என்பவரை கூட்டு பாலியல் வன்கொடுமை செய்த குற்றவாளிகளை குஜராத் அரசு ஆகஸ்ட் 15ஆம் தேதி விடுவித்தது. இந்த குற்றவாளிகள் 11 பேரையும் முன்கூட்டியே விடுதலை செய்ய மத்திய உள்துறை அமைச்சகம் அனுமதி அளித்துள்ளது.

**பெண்களை ஏமாற்றும் மோடி**

இந்த நிலையில் இதுகுறித்து காங்கிரஸ் தலைவர் காங்கிரஸ் எம்பி ராகுல் காந்தி கூறுகையில், செங்கோட்டையிலிருந்து பெண்களுடைய மதிப்பு குறித்து பேசுகிறார்கள். ஆனால், உண்மையில் அவர்கள் பாலியல் குற்றவாளிகளுடன் துணை நிற்கிறார்கள்.

குறிப்பாக, பிரதமர் மோடி கொடுத்த வாக்குறுதிக்கும் அவருடைய நோக்கத்திற்கும் உள்ள வித்தியாசம் தெளிவாக தெரிகிறது. பெண்களை பிரதமர் மோடி ஏமாற்றியுள்ளார் என கடுமையாக விமர்சனம் செய்துள்ளார்.

# இங்கிலாந்து மினி பட்ஜெட்டில் பொருளாதார தவறுகள்: மன்னிப்பு கேட்டார் பிரதமர் லிஸ் டிரஸ்



சென்னை, அக்டோபர் 18 2022: பொருளாதார தவறுகளுக்காக இங்கிலாந்து பிரதமர் லிஸ் டிரஸ் மன்னிப்பு கேட்டார்.

இங்கிலாந்தின் புதிய பிரதமராக லிஸ் டிரஸ் சமீபத்தில் பதவி ஏற்றார். பொருளாதாரத்தை சீரமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

இதற்கு இடையே கடந்த மாதம் தாக்கல் செய்யப்பட்ட மினி பட்ஜெட்டில் வரி குறைப்பு திட்டங்கள் அறிவிக்கப்பட்டன. நிறுவனங்களுக்கான வரி உயர்வு, அதிக வருவாய் உள்ளவர்களுக்கு 45 சதவீத வரி உயர்வு போன்றவை ரத்து செய்யப்பட்டன.

இந்த வரி குறைப்பு திட்டத்தால் இங்கிலாந்து பொருளாதாரத்தில் பாதிப்பு ஏற்பட்டது. இதனால் பிரதமர் லிஸ் டிரசுக்கு சொந்த கட்சி எம்.பி.க்கள் சிலர் எதிர்ப்பு தெரிவித்தனர்.

இதனால் லிஸ்டிரசுக்கு பதிலாக புதிய பிரதமர் தேர்ந்தெடுக்கப்படுவார் என்று தகவல் வெளியானதால் பரபரப்பு ஏற்பட்டது.

இதையடுத்து இங்கிலாந்து நிதி அமைச்சராக இருந்த குவாசி குவா□ர்டஸ்கை பிரதமர் லிஸ்டிரஸ் பதவி நீக்கம் செய்தார். புதிய அமைச்சராக ஜெர்மி ஹன்டை நியமித்தார்.

இதற்கிடையே பிரதமர் அறிவித்த அனைத்து வரிக் குறைப்புகளையும் புதிய நிதி அமைச்சர் ஜெர்மி ஹன்ட் முழுமையாக திரும்ப பெற்றார்.

இந்த நிலையில் பொருளாதார தவறுக்காக பிரதமர் லிஸ்டிரஸ் மன்னிப்பு கேட்டார்.

இது தொடர்பாக அவர் அளித்த பேட்டியில் கூறியதாவது:-

நாட்டுக்காக நான் தேர்ந்தெடுக்கப்பட்டதால் பதவியில் இருக்கிறேன். எனது ஒரு மாத கால ஆட்சி சரியாக இல்லை. ஆனால் பிழைகள் சரி செய்யப்பட்டு விட்டன. நான் பொறுப்பை ஏற்க விரும்புகிறேன். நடந்த தவறுகளுக்கு மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன் என்றார்.

# வயாகரா' பயன்படுத்தி உக்ரைன் பெண்கள் மீது வன்கொடுமை ரஷ்ய வீரர்கள் மீது ஐநா சிறப்பு பிரதிநிதி குற்றச்சாட்டு



சென்னை, அக்டோபர் 18 2022: உக்ரைன் பெண்களை பலாத்காரம் செய்ய ரஷ்யா ராணுவ வீரர்களுக்கு வயாகரா கொடுக்கப்படுவதாக ஐ.நா சிறப்பு பிரதிநிதி பிரமிளா பட்டன் குற்றஞ்சாட்டி உள்ளார்.

உக்ரைன் மீது கடந்த பிப்ரவரி மாதம் 24 ஆம் தேதி ரஷ்யா தனது தாக்குதலை தொடங்கியது. ரஷ்யாவின் தாக்குதலுக்கு உக்ரைன் தொடர்ந்து பதிலடி கொடுத்து வருகிறது. இந்த போரில் இரு தரப்பிலும் மிகப்பெரிய அளவில் உயிர் சேதம் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், இந்த போரில் பாலியல் வன்முறை தொடர்பாக ஐ.நா.வின் சிறப்பு பிரதிநிதி பிரமிளா பட்டன் அதிர்ச்சியூட்டும் தகவலை வெளியிட்டு உள்ளார். உக்ரைனில் பலாத்காரம் ஒரு போர் ஆயுதமாக பயன்படுத்தப்படுகிறதா என்று கேட்ட போது, “எல்லா அறிகுறிகளும் உள்ளன” என்று அவர் கூறினார்.

பாலியல் வன்முறை

மேலும் அவர் கூறும்போது, செப்டம்பரின் பிற்பகுதியில் வெளியிடப்பட்ட ஐ.நா அறிக்கையை குறிப்பிட்டு, படையெடுப்பு தொடங்கியதில் இருந்து நூற்றுக்கும் மேற்பட்ட கற்பழிப்பு மற்றும் பாலியல் வன்முறை வழக்குகளை ஐ.நா பதிவு செய்துள்ளது. பாதிக்கப்பட்டவர்கள் பெண்கள் மற்றும் சிறுமிகள் மட்டுமல்ல, ஆண்களும் சிறுவர்களும் கூட.

“பெண்கள் பல நாட்கள் அடைத்து வைக்கப்பட்டு பாலியல் பலாத்காரம் செய்யப்படுகின்றனர். சிறுவர்களும், ஆண்களும் பலாத்காரம் செயப்படுகின்றனர். தொடர் பிறப்புறுப்பு சிதைவுகளைப் பார்க்கும்போது, ரஷ்ய வீரர்கள் வயாகராவை பயன்படுத்துவதாக பாதிக்கப்பட்ட பெண்கள் சாட்சியமளித்து உள்ளனர். இதுவும் ஒரு ராணுவ உத்தியாக உள்ளது.

ரஷ்யப் படைகளால் நடத்தப்பட்ட மனித குலத்திற்கு எதிரான குற்றங்களை உறுதிப்படுத்தியது. மேலும் சேகரிக்கப்பட்ட சாட்சியங்களின்படி, பாலியல் வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களின் வயது நான்கு முதல் 82 வயது வரை இருக்கும். அறிக்கை செய்யப்பட்ட வழக்குகள் ஒரு சிறிதளவு மட்டுமே என்று அவர் கூறி உள்ளார்.

# பணியாளர்களின் எண்ணிக்கையைப் பெருக்கும் டாடா எலக்ட்ரானிக்ஸ்: திறமையானவர்களை வளர்த்தெடுக்கும் நோக்கில் தமிழ்நாட்டு பல்கலைக்கழகங்களுடன் கைகோர்ப்பு

சென்னை, அக்டோபர் 18 2022: டாடா குழுமத்தில் இருந்து புதிதாக உருவாக்கப்பட்ட புதிய தலைமுறை நிறுவனமான டாடா எலக்ட்ரானிக்ஸ், துல்லியமான கூறுகளை உற்பத்தி செய்வதில் கவனம் செலுத்துவதுடன், வர்த்தகச் செயல்பாடுகளுக்காகத் தயாராகிவரும் நிலையில் தனது பணியாளர்களின் எண்ணிக்கையைத் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. ஏற்கனவே 8,000க்கும் மேற்பட்ட பணியாளர்கள் பணியாற்றும் நிலையில், அடுத்த சில வாரங்களில் மேலும் பலரைப் புதிதாகச் சேர்க்கத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார் அந்நிறுவனத்தின் செய்தித்தொடர்பாளர். தமிழ்நாட்டிலுள்ள கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஒரு மாபெரும் ஆலையைச் செயல்படுத்திவரும் டாடா எலக்ட்ரானிக்ஸ், அம்மாவட்டத்தைச் சேர்ந்த மக்களை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பணிகளில் ஈடுபடுத்துகிறது. தமிழ்நாட்டிலுள்ள பணியாளர்களையே 80%க்கும் அதிகமான அளவில் பணியில் அமர்த்துவதில் இந்நிறுவனம் கவனம் செலுத்துகிறது. இது பற்றி டாடா எலக்ட்ரானிக்ஸ் நிறுவனத்தின் செய்தித்தொடர்பாளர் பேசுகையில், “தற்போது தமிழ்நாட்டைச் சேர்ந்த 5,500 பேர் எங்களது நிறுவனத்தில் பணியாற்றுகின்றனர். எங்களது நிறுவனத்தின் வளர்ச்சித் திட்டங்களின் ஒரு பகுதியாக தமிழ்நாடும் அதன் மக்களும் விளங்குவதில் எங்களது அசைக்க முடியாத உறுதிப்பாட்டை மீண்டும் ஒருமுறை வலியுறுத்துகிறோம்; வர்த்தக நடவடிக்கைகளைத் தொடங்கும் நேரத்தில் எங்களது நிறுவனப் பணியாளர்களில் 80%க்கும் அதிகமானோர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களாக இருப்பார்கள் என்ற திட்டத்தையும் கொண்டிருக்கிறோம்” எனத் தெரிவித்தார். டாடா எலக்ட்ரானிக்ஸில் குறிப்பிடத்தக்க அளவில் கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சேர்ந்த பணியாளர்கள் உள்ளனர்.

நிறுவனத்தில் வேறுபட்ட திறமையாளர்கள் இருப்பதை உறுதிப்படுத்துவதோடு, அதனை வளர்க்கவும் இந்நிறுவனம் பாடுபடுகிறது. தமிழ்நாட்டின் வேறு பகுதிகளில் இருந்து வந்திருக்கும் பணியாளர்களுக்கு உணவு, தங்குமிடம், போக்குவரத்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சரியான திறமையாளர்களை கண்டெடுக்கும் நோக்கில் தமிழக அரசுடன் இணைந்து கிட்டத்தட்ட அனைத்து மாவட்டங்களிலும் டாடா எலக்ட்ரானிக்ஸ் பணியாளர் தேர்வு முகாம்களை நடத்தி வருவதாகத் தெரிவித்துள்ளார் அதன் செய்தித்தொடர்பாளர்; கடந்து சில நாட்களாக கிருஷ்ணகிரி, தர்மபுரி, விழுப்புரம், நாமக்கல் மாவட்டங்களைச் சேர்ந்த 475 பேர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களைப் பணியில் சேர்ப்பதோடு, மாநிலத்தில் இளம் தலைமுறையிடையே திறமைகளை வளர்த்தெடுக்கும் நோக்கில் தமிழ்நாட்டிலுள்ள முன்னணி பல்கலைக்கழகங்களோடு கூட்டுச் செயல்பாட்டை மேற்கொள்கிறது டாடா எலக்ட்ரானிக்ஸ். வேலூரில் உள்ள விஐடி, கோயம்புத்தூரில் பாரதியார் பல்கலைக்கழகம், தஞ்சாவூரில் சாஸ்த்ரா பல்கலைக்கழகம் ஆகியவற்றில் இந்நிறுவனத்தின் தேவைகளோடு தொடர்புடைய பாடப்பிரிவுகளில் இளங்கலை, முதுகலை படிப்புகள் நடத்தப்படுகின்றன. இந்த ஆண்டில் 400க்கும் மேற்பட்ட மாணவர்கள் இப்பிரிவுகளில் சேர்ந்துள்ளனர்; அடுத்த ஆண்டு இந்த எண்ணிக்கை மேலும் அதிகமாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கிருஷ்ணகிரி மாவட்டத்திலும் தமிழ்நாட்டிலும் வேலைவாய்ப்புகளைப் பெருக்குவதோடு, சுற்றியுள்ள பகுதிகளில் நிலவும் சமூகப் பண்பாட்டு பரப்பில் சுகாதாரம், சுத்தம் மற்றும் கல்வி வழியே பெரும் மாற்றத்தை உருவாக்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது டாடா எலக்ட்ரானிக்ஸ்.

# ராணுவ கண்காட்சி 2022-ல் ருவாண்டா, அர்மேனியன் மற்றும் மாலத்தீவு போன்ற நாடுகளின் பாதுகாப்புத்துறை அமைச்சர்களுடன், மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்துகிறார்

சென்னை, அக்டோபர் 18 2022: மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங், அக்டோபர் 18, 2022 அன்று ராணுவ கண்காட்சி 2022-ல் கலந்து கொள்வதற்காக ருவாண்டா, அர்மேனியன் மற்றும் மாலத்தீவு போன்ற நாடுகளைச் சேர்ந்த பாதுகாப்புத்துறை அமைச்சர்களுடன், இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்தினார்.

ருவாண்டா பாதுகாப்புத்துறை அமைச்சர் மேஜர் ஜெனரல் ஆல்பர்ட் முராசிரா, ஆர்மீனியாவின் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு சுரேன் பாபிக்யான் மற்றும் மாலத்தீவுகளின் பாதுகாப்புத்துறை அமைச்சர் திருமதி மரியா அகமது தீதி ஆகியோரை மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் சந்தித்து பேசினார்.

இந்த பேச்சுவார்த்தைகளின் போது, அந்தந்த நாடுகளுடன் பரஸ்பர நன்மை பயக்கும் பாதுகாப்பு தொடர்பான ஒத்துழைப்பை விரிவுபடுத்துவதற்கான வழிகளைக் கண்டறிவதில் கவனம் செலுத்துவது குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது.

# ஆரோக்கிய மற்றும் பாதுகாப்பான தீபாவளிக்கான குறிப்புகள் டாக்டர் வைபவ் சுரேஷ், நோய் தடுப்பு நிபுணர், ஃபோர்டிஸ் மருத்துவமனை, வடபழனி



சென்னை, அக்டோபர் 18 2022: தீபங்களின் திருவிழாவான தீபாவளி இதோ வந்துவிட்டது! சுவையான உணவு, வண்ணமயமான ரங்கோலி, ஒளிரும் விளக்குகள், கண்கவர் ஆடைகள் மற்றும் பட்டாசுகள் இவை அனைத்துமே தீபாவளியை நினைவுபடுத்தும். கொண்டாட்டங்களுக்குத் தயாராகவும், குடும்பத்துடன் பொழுதைக் கழிக்கவும் ஆவலாக இருக்கிறீர்களா? பண்டிகையைக் குதூகலத்துடன் கொண்டாடும் அதே தருணம், அசம்பாவிதங்கள் ஏற்படா வகையில் பாதுகாப்பாக இருப்பதை நினைவில் கொள்வதும் முக்கியமாகும். ஒவ்வொரு ஆண்டும் தீபாவளித் திருநாளின் போது எதிர்பாரா விபத்துகள், தீக்காயங்கள், ஆஸ்துமா தீவிரமடைதல், திடீர் மாரடைப்பு உள்ளிட்ட பல்வேறு காரணங்களுக்காக அவசர சிகிச்சைப் பிரிவுக்கு ஆயிரக்கணக்கானோர் வருகின்றனர். பட்டாசு வெடிப்பதால் காற்று மற்றும் ஒலி மாசுபடைந்து சுற்றுச்சூழலைப் பாதிக்கிறது. எனவே தீபாவளியை ஆரோக்கியமாகவும், பாதுகாப்பாவும் கொண்டாட வடபழநி, ஃபோர்டிஸ் மருத்துவமனை, நோய் தடுப்பு நிபுணர் டாக்டர் வைபவ் சுரேஷ், சில குறிப்புகளைத் தருகிறார்.

பட்டாசுகள் வெடிப்பதைத் தவிர்க்க/குறைக்க வேண்டும்:

குப்பைகள் மற்றும் காய்ந்த இலைக்களைக் கொளுத்துவது, பட்டாசு வெடிப்பது ஆகியவை மூலம் உருவாகும் புகை மண்டலம் நீண்ட கால சுகாதார அபாயங்களுக்கு வழிவகுக்கும். பட்டாசுகளிலிருந்து வெளியேறும் புகை மற்றும் இராசாயனங்களிலுள்ள கரி / உலோகத் துகள்களால், ஏற்கனவே ஒவ்வாமை நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் இன்னும் கடுமையான பாதிப்புக்கு உள்ளாவார்கள். மூக்கு துவாரங்களில் புகைத் துகள் ஒட்டிக் கொள்வதால், நாசி அழற்சி, ஆஸ்துமா ஆகியவை எற்படுவதுடன், நோய் எதிர்ப்புச் சக்தியையும் குறையும். இதய நோய் மற்றும் உயர் இரத்த அழுத்தமுள்ள நோயாளிகளின் இரத்தத்தில் அபாயகரமான வாயுகள் கலந்து உயிருக்கே ஆபத்தை விளைவிக்கும். புகையிலிருந்து வெளியேறும் நச்சு வாயுக்களும், கனமான விஷ உலோகங்களும் புற்றுநோயை உண்டாக்கும் தன்மை கொண்டவை. நுரையீரல் நோய்கள் இன்னும் தீவிரமடையும். பட்டாஸுகளை வெடிக்கும் போது ஏற்படும் அதிக சத்தம் உங்கள் இதயத் துடிப்பையும், இரத்த அழுத்தத்தையும் அதிகரித்து மாரடைப்புக்கு வழிவகுக்கும். எனவே சத்தமற்ற பட்டாஸுகளை வெடிக்கவும்.

பட்டாசுகள் / தீபங்களைக் கொளுத்தும் போது சானிடைசர்களைப் பயன்படுத்த வேண்டாம்:

பட்டாசுகள் / தீபங்களைக் கொளுத்தும் போது எரிபொருள் கலந்த சானிடைசர்களைப் பயன்படுத்துவதைத் தவிர்க்கவும். கோவிட்-19 கொள்ளை நோய் பரவலைத் தொடர்ந்து தனிநபர்கள் கைகளைக் கழுவ சானிடைசர்களைப் பயன்படுத்துவதால், ஒவ்வொரு வீட்டிலும் இதைப் பார்க்கலாம். சானிடைசர்களில் எரிபொருள் கலந்திருப்பதால் அவை எளிதில் நெருப்புப் பற்றித் தீக்காயங்களை ஏற்படுத்தும். எனவே மெழுகுவர்த்தி / பட்டாஸுகள் கொளுத்துவதற்கு முன்பு சோப் மற்றும் தண்ணீரால் கைகளை நன்கு சுத்தப்படுத்திக் கொள்ளுங்கள். சானிடைசர் பாட்டிலை எரியும் விளக்கிலிருந்து சற்றுத் தள்ளி வைக்கவும்.

உணவைக் கவனமாகத் தேர்ந்தெடுக்கவும்:

தீபாவளி என்றவுடன், நாவினிக்கும் சுவையான இனிப்புகள், பலகாரங்கள் ஆகியவை நினைவுக்கு வரும். இந்த நன்நாளில் சிலர் மசாலா மற்றும் எண்ணெய் கலந்த அசைவ உணவுகளை அதிக புரத சத்துக்களுடன் வயிற்றுக்குள் திணிப்பார்கள். எனவே உடல் ஆரோக்கியம் கருதி மசாலா, எண்ணெய் குறைவாகவும், காய்கள் மற்றும் புரதங்கள் கலந்த சமச்சீரான உணவை அதிகமகவும், எடுத்துக் கொள்ளப் பரிந்துரைக்கிறோம். தெருவில் விற்கும் உணவுகளையும், இனிப்புகளையும் வாங்க வேண்டாம். சுத்தமாகவும், அக்கறையோடும் தயாரிக்கும் நம்பகமான நிறுவனங்களின் உணவு மற்றும் இனிப்புகளை மட்டுமே வாங்கவும். உண்பதற்கு முன்பு நீங்களும், குழந்தைகளும், கைகளை நன்கு கழுவுவதை உறுதிப்படுத்தவும். இரத்தத்தில் உள்ள சர்க்கரை அளவு மீது கவனம் இருக்கட்டும்:

காஷ்மீர் முதல் கன்னியாகுமரி, அருணாசலப் பிரதேசம் முதல் குஜ்ராத் வரை என நான்கு திசைகளில் வசிக்கும் இந்தியர்கள் அனைவருக்கும் இனிப்புகள் பிடிக்கும். கொண்டாடங்களில் ஈடுபட பண்டிகைதான் சிறந்த தருணமாகும். ஆனால் இந்த ஈடுபாடும், நுகர்வுமே கடுமையான பாதிப்புகளை நீண்ட காலத்துக்கு விளைவிக்கும். ‘உலகின் நீரிழிவுத் தலைநகர்’ ஆக இந்தியா திகழும் சூழலில், நீரிழிவின் அபாயம் இந்தியர்களுக்கு மரபு ரீதியாகவே உண்டு. ஆகவே இரத்தத்தில் சர்க்கரை அளவுகளைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கக் குறைந்த அளவில் இனிப்புகளை எடுத்துக் கொள்வது நலம். இனிப்புகளுடன்தான் பண்டிகையைக் கொண்டாட வேண்டுமென நினைத்தால், குறைந்த அளவில் இனிப்புகள் அல்லது சுகர்-ஃப்ரீ இனிப்புகள் / குளிர் பானங்கள் எடுத்துக் கொள்ளுங்கள்.

ஆரோக்கியத்தை பரிசளியுங்கள்:

நண்பர்கள் மற்றும் பிடித்தமாவர்களுக்கு பரிசுகளைப் பகிர்ந்து கொள்ள தீபாவளியே சிறந்த தருணமாகும். நீங்கள் வழங்கும் இனிப்புகள் சர்க்கரை, நெய் இல்லாமல், குறைந்த கலோரிகளுடன் கூடிய ஆரோக்கிய தின்பண்டங்களாக இருக்க வேண்டும். பழங்கள், உலர் பழங்கள், கொட்டைகள் ஆகியவற்றையும் பரிசளிக்கலாம். இதயத்துக்கு ஆரோக்கியம் அளிக்கும், கெட்ட கொழுப்பைக் குறைத்து, நல்ல கொழுப்பை அதிகரிக்கும் பாதாம் பரிசளிக்க மிகவும் சிறந்தது. ஆரோக்கிய உணவுகளைப் பரிசாக அளிப்பதன் மூலம் ஆரோக்கியமான பழக்கங்களைக் கடைப்பிடிக்க அதைப் பெறுவோர்க்குக் கற்பிப்பதன் மூலம் அவர்கள் உடல் நலனில் உங்களுக்குள்ள அக்கறை வெளிப்படும். தீபாவளிக் கொண்டாட்ட நேரத்தில் மகிழ்ச்சியையும், பாதுகாப்பையும் உறுதிப்படுத்தக், கூட்டங்களில் பங்கேற்கும் போதும், பரிசுகளைப் பகிர்ந்து கொள்ளும் போதும், சமூக இடைவெளி, முகக்கவசம் அணிதல், சானிடைசர் மூலம் கைகழுவுதல் ஆகிய கொள்ளை நோய்க் கால நெறிமுறைகளைத் தொடர்ந்து தவறாமல் கடைப்பிடிக்கவும். மது பானம் உபயோகப்படுத்தும்போது விழிப்பும் பொறுப்பும் அவசியம்

மகிழ்ச்சியையும், குதூகலத்தையும் பகிர்ந்து கொள்ள நண்பர்களையும், பிடித்தமானவர்களையும் சந்திக்க தீபாவளியே சிறந்த தருணமாகும். சிலருக்கு இந்தக் கொண்டாட்டம் என்பது இனிப்புகள் மற்றும் உணவுகள் மட்டுமே; ஆனால் இன்னும் சிலருக்கு மதுபானக் கோப்பையுடனேயாகும். நண்பர்களுடன் கொண்டாடும் போது கொஞ்சம் அதிகமாகவே மதுபானம் அருந்துவது இயற்கையே. ஆனால் மதுபானம் உங்கள் தமனிகள், குருதிக் குழாய்களை தடிமனாக்குவதுடன், ஈரலையும், சிறுநீரகத்தையும் பாதிக்கும். அதிக உணவும், இனிப்பும், மதுபானமும் மாரடைப்புக்கு வழிவகுக்கும். எனவே மதுபானம் அருந்துவதில் எச்சரிக்கை தேவை. மேலும் நீங்களோ, நண்பர்களோ, குடித்துவிட்டு வாகனம் ஓட்டினால் வாழ்க்கை முழுவதும் மீள முடியாத கடுமையான பாதிப்புகளுக்கு உள்ளாவீர்கள் என்பது ஞாபகம் இருக்கட்டும். பண்டிகைக் கால கொண்டாட்டங்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியையும், குதூகலத்தையும் வழங்கும். அக்கம் பக்கம் வசிக்கும் மூத்த குடிமக்களும், நோயாளிகளும், பாதுகாப்பாகவும், சந்தோஷமாகவும், தீபாவளியைக் கொண்டாடுவதைச் சமூகப் பொறுப்புள்ள மனிதனாக நீங்கள் உறுதிப்படுத்துவது அவசியமாகும். உங்கள் உடல் நலம் ஆரோக்கியமாக இருந்தால் மட்டுமே தீபாவளியை இன்னும் பல வருடங்களுக்கு மலரும் நினைவுகளுடன் மகிழ்ச்சியாக கொண்டாட முடியும். இக்குறிப்புகள் மகிழ்ச்சியாகவும், ஆரோக்கியமாகவும், பாதுகாப்பாகவும், தீபாவளியைக் கொண்டாட உதவுமென நம்புகிறேன்.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# ஐசிஐசிஐ புருடென்ஷியல் லைஃப் இன்சூரன்ஸ், நிதியாண்டு 2023 இன் முதல் அரையாண்டுக்கான வலுவான செயல்திறனைப் பதிவு செய்கிறது

சென்னை, அக்டோபர் 18 2022: ஐசிஐசிஐ புருடென்ஷியல் லைஃப் இன்சூரன்ஸ் நிதியாண்டு 2023 இன் முதல் அரையாண்டில் புதிய வணிகத்தின் மதிப்பில் (வி என் பி) 25.1% வலுவான வளர்ச்சியைப் பதிவு செய்தது. இலாபத்தின் முக்கிய அளவீடான புதிய வணிக மதிப்பு வரம்பு, 31.0% ஆக அதிகரித்தது. மற்றும் முழுமையான புதிய வணிக மதிப்பு வரம்பு, நிதியாண்டு 2023 இன் முதல் அரையாண்டில் ` 10.92 பில்லியனாக இருந்தது.

அனுவலைஸ்ட் பிரீமியம் ஈக்குவலன்ட் (எ பி ஈ), முடிவடைந்த 2023 நிதியாண்டு முதல் அரையாண்டில் ` 35.19 பில்லியன் மற்றும் புதிய வணிக பிரீமியம் ` 73.59 பில்லியனுடன் 32% ஆக தொடர்ச்சியாக வளர்ந்தது. 2023 நிதியாண்டு முதல் அரையாண்டில், பாதுகாப்பு வணிகப் பிரிவு எ பி ஈ ஆண்டுக்கு ஆண்டு 29.1% வளர்ந்தது, இதன் விளைவாக ஒட்டுமொத்த எ பி ஈ இல் 20.2% பாதுகாப்பு கலவையாக இருந்தது. ஒரு முக்கிய கவனம் செலுத்தும் பகுதியான வருடாந்திரம் வணிகப் பிரிவில் இருந்து, எ பி ஈ, ஆண்டுக்கு ஆண்டு 68.8% வளர்ந்துள்ளது. குறைவான ஊடுருவல் காரணமாக, இந்த இரண்டு பிரிவுகளும் குறிப்பிடத்தக்க வளர்ச்சி வாய்ப்புகளை வழங்குகின்றன. இந்த தயாரிப்பு மற்றும் விநியோக கலவையின் பல்வகைப்படுத்தல், வெளிப்புற வளர்ச்சிகளின் தாக்கத்தை நிர்வகிக்கவும் மற்றும் மாறும் நுகர்வோர் விருப்பங்களுக்கு விரை திறமான முறையில் பதிலளிக்கவும் நிறுவனத்திற்கு உதவுகிறது.

2023 நிதியாண்டின் முதல் அரையாண்டில் நிறுவனத்தின் புதிய வணிக காப்பீட்டு தொகையானது, ஆண்டுக்கு ஆண்டு 42.3% வளர்ச்சியாக ` 4.8 டிரில்லியனாக இருந்தது, இது 15.7% சந்தைப் பங்குடன் அதன் தனியார் சந்தைத் தலைமை நிலையைத் தக்க வைத்துக் கொள்ள உதவுகிறது.

அனைத்து பிரிவுகளிலும் நிலைத்தன்மை விகிதங்கள் மேம்பட்டுள்ளன. வணிகத்தின் தரத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 13வது மாத விகிதம், 2023 நிதியாண்டின் முதல் அரையாண்டில் 85.9% ஆக 2022 நிதியாண்டின் முதல் அரையாண்டைவிட 80 பி பி எஸ் முன்னேற்றம் இருந்தது.

ஐ சி ஐ சி ஐ புருடென்ஷியல் லைஃப் இன்சூரன்ஸின் எம்டி & சிஇஓ திரு. என் எஸ் கண்ணன் கூறுகையில், "புதிய வணிகத்தின் மதிப்பில் (வி என் பி) ஆண்டுக்கு ஆண்டு 25.1% வலுவான வளர்ச்சியை எட்டியுள்ளோம், இது 2023 நிதியாண்டு முதல் அரையாண்டில் '10.92 பில்லியனாக இருந்தது. இது வேகமாக வளரும் சூழ்நிலைகளை வெற்றிகரமாக வழிநடத்தும் நமது திறனை வலியுறுத்துகிறது. இது, எ பி ஈ இன் வளர்ச்சி மற்றும் விளிம்பு விரிவாக்கத்தால், 31% தொழில்துறையின் முன்னணி நிலைகளுக்கு உந்தப்பட்டது. இந்த வலுவான வி என் பி வளர்ச்சியின் பின்னணியிலும், வரவிருக்கும் மாதங்களுக்கு சாதகமான பிரீமியம் அடித்தளத்திலும், இந்த நிதியாண்டின் இறுதிக்குள் எங்களின் நிதியாண்டு 2019 வி என் பி ஐ இரட்டிப்பாக்கும் நோக்கத்தை அடைவதற்கான பாதையில் இருக்கிறோம் என்று நாங்கள் நம்புகிறோம்.

நாட்டின் வரையறுக்கப்பட்ட தேவைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வருடாந்திரம் மற்றும் பாதுகாப்பு ஆகிய எங்கள் இரண்டு கவனம் செலுத்தும் பகுதிகளும், இந்த காலகட்டத்தில் சிறப்பாகச் செயல்பட்டுள்ளன. 2023 நிதியாண்டு முதல் அரையாண்டில் இந்த வருடாந்திரப் பிரிவு 69% ஆண்டுக்கு ஆண்டு வளர்ச்சியின் ஈர்க்கக்கூடிய செயல்திறனை வழங்கியுள்ளது மற்றும் பாதுகாப்புப் பிரிவு இந்த காலகட்டத்தில் எ பி ஈ இல் 20% பங்களித்தது. ஒழுங்குமுறைத் தேவையை விட அதிகமாக உள்ள 200%க்கும் அதிகமான கடன் செலுத்தும் திறன் விகிதத்துடன், இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள நாங்கள் நன்கு நிலைநிறுத்தப்பட்டுள்ளோம்.

இந்த வலுவான செயல்திறன் ஆனது, புதிய வணிக காப்பீட்டு தொகை அடிப்படையில், ஆண்டுக்கு ஆண்டு 42.3% வளர்ச்சியடைந்து, 15.7% சந்தைப் பங்குடன், தனியார் துறை சந்தைத் தலைவராக எங்களின் நிலையைத் தக்கவைத்துக் கொள்ள உதவியது." என்றார்.

# சென்னையில் ஷிவ் நாடார் பள்ளி தொடக்கம்! அறிவிக்கும் ஷிவ் நாடார் ஃபவுண்டேஷன்



சென்னை, அக்டோபர் 18 2022: 12.1 பில்லியன் யுஎஸ் டாலர் மதிப்புள்ள எச் சி எல் என்ற உலகளாவிய முன்னணி பெரு நிறுவனத்தின் நிறுவனர் திரு. ஷிவ் நாடாரின் அறச்செயல் நடவடிக்கை பிரிவான ஷிவ் நாடார் ஃபவுண்டேஷன் அதன் பிரபலமான கே-12 ஸ்கூல் சங்கிலித்தொடர் சென்னை மாநகரில் ஷிவ் நாடார் ஸ்கூல் என்ற பெயரில் தொடங்கப்படுவதை அறிவித்திருக்கிறது. பாரம்பரிய மதிப்பீடுகள் மற்றும் கலாச்சாரத்துடன் ஒரு நவீன கண்ணோட்டத்துடன்கூடிய சர்வதேச பள்ளியாக திகழ்வதே இதன் குறிக்கோளாகும். கல்வி மீது இந்த ஃபவுண்டேஷன் கொண்டிருக்கும் மிக ஆழமான பொறுப்புறுதியை இத்தொடக்கத்தின் மூலம் மீண்டும் உறுதிசெய்திருக்கும் இப்பள்ளி, இன்டர்நேஷனல் பக்காலோரியேட் போர்டு உடன் இணைக்கப்பட்டதாக இயங்கும். இளம் மாணவர்களின் முழுமையான உருவாக்கம் மற்றும் வளர்ச்சிக்கு உலகத்தரத்திலான கல்வியை இப்பள்ளி வழங்கும். கல்வி செயல்பாடுகள் தொடங்கும் முதல் ஆண்டில் ஏறக்குறைய 150 மாணவர்கள் இப்பள்ளியில் சேர்க்கப்படுவார்கள் மற்றும் பள்ளிச்சேர்க்கையின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரிக்கும்.

நர்சரி வகுப்பிலிருந்து 4-ஆம் வகுப்பு வரையிலான புதிய கல்வி அமர்வு 2023 ஜூன் மாதத்திலிருந்து ஆரம்பமாகும் மற்றும் இதற்கான பதிவு செயல்முறை விவரங்கள் https://shivnadarschool.edu.in/chennai/ என்ற இணையதளத்தில் கிடைக்கப்பெறுகின்றன.

ஷிவ் நாடார் பள்ளியின் தலைவரும், ஷிவ் நாடார் ஃபவுண்டேஷனின் அறங்காவலருமான திரு. ஷிக்கர் மல்ஹோத்ரா இது பற்றி கூறியதாவது: "திரு. ஷிவ் நாடார் பிறந்த தாயகமாக இது இருப்பதால் தமிழ்நாடு எப்போதுமே சிறப்பானது; எனவே ஒரு சர்வதேச பள்ளியை தொடங்குவதற்கு ஒரு உகந்த அமைவிடமாக தமிழ்நாடு தேர்வு செய்யப்பட்டிருப்பதும் வியப்பில்லை. நீண்டகாலம் நிலைக்கிறவாறு மற்றும் எதிர்கால தலைமுறைகளுக்கு ஆக்கபூர்வ தாக்கத்தைத் தொடர்ந்து வழங்குகிறவாறு கல்வி நிறுவனங்களை உருவாக்க வேண்டும் என்ற 'ஆக்கபூர்வ அறச்செயல்' என்ற கோட்பாட்டை ஷிவ் நாடார் ஃபவுண்டேஷன் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. சென்னை மாநகரில் உயர்கல்விக்கான இரு கல்வி நிறுவனங்களை ஏற்கனவே நாங்கள் தொடங்கி சிறப்பாக நிர்வகித்து வருகிறோம். எனவே, கே-12-ஆம் வகுப்பு வரையிலான கற்றல் பயணத்தை ஒருங்கிணைப்பதில் இதுவொரு இயற்கையான படிநிலையாகவே இருக்கிறது. டெல்லி-என்சிஆர் பகுதியில் மூன்று ஷிவ் நாடார் பள்ளிகளை தொடங்கி வெற்றிகரமாக நடத்திவரும் நிலையில் சென்னை மாநகரில் அதன் நான்காவது பள்ளியை தொடங்குவது எங்களுக்கு பெருமிதத்தையும் உற்சாகத்தையும் தருகிறது."

ஷிவ் நாடார் பள்ளியின் தலைமை செயல் அலுவலர் கர்னல் கோபால் கருணாகரன் (ஓய்வு) பேசுகையில், "சென்னையில் ஷிவ் நாடார் பள்ளியை தொடங்குவதில் நாங்கள் பெருமகிழ்ச்சியடைகிறோம். ஒரு முழுமையான கற்றல் அனுபவத்தை இங்கு நாங்கள் மாணவர்களுக்கு வழங்குவோம்; கல்விசார்ந்த நேர்த்தி நிலையானது, இசை, நாடகம், நடனம் மற்றும் காட்சி கலை போன்ற கலைகளின் செயலாக்கம், விளையாட்டில் நேர்த்தி, பிரச்சனைகளுக்கு தீர்வுகாணும் மற்றும் செயல்திட்ட அடிப்படையிலான கற்றல் மற்றும் தலைமைத்துவ பண்பு ஆகியவற்றோடு ஒருங்கிணைக்கப்படும் அமைவிடமாக இப்பள்ளி செயல்படும். நுண்ணறிவு, விவேகம், சமூக மற்றும் உணர்வு ரீதியில் சமநிலை கொண்ட நாளைய சிறந்த குடிமக்களை உருவாக்குவதற்கான அனைத்து அத்தியாவசிய அம்சங்களும் ஒருங்கிணைந்த கலவையாக இக்கல்வி இருக்கும். புதுயுக, முற்போக்கான கல்விசார் வழிமுறைகளின் மூலம் ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்களை உள்ளடக்கிய ஒரு கற்றல் சமூகத்தை உருவாக்குவதை எமது பள்ளியின் செயல்நடைமுறைகள் குறிக்கோளாக கொண்டிருக்கும். இங்கு இடம்பெறவுள்ள சர்வதேச கல்வி பாடத்திட்டம், இந்தியா மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்த மிகச்சிறந்த கல்வியாளர்களால் முன்னெடுக்கப்படும் மற்றும் மிகச்சிறப்பான கல்விசார் உட்கட்டமைப்பு வசதிகளின் ஆதரவோடு இப்பள்ளி இயங்கும். கடந்த பத்தாண்டுகளுக்கும் அதிகமாக டெல்லி-என்சிஆர் பகுதியில் இயங்கிவரும் எமது மூன்று பள்ளிகளில் உருவாக்கப்பட்டுள்ள சிறந்த நடைமுறைகள் மற்றும் கற்றல் முறையியல்களிலிருந்து சென்னையில் தொடங்கப்படும் ஷிவ் நாடார் பள்ளி அனுபவரீதியிலான ஆதாயத்தைப் பெறும்," என்று கூறினார்.

# டாடா ஏஐஏ, உலக அளவில் புகழ்பெற்ற ஹோலிஸ்டிக் வெல்னஸ் திட்டமான வைட்டாலிட்டி ஐ இந்திய நுகர்வோருக்கு அறிமுகப்படுத்துகிறது

மும்பை, அக்டோபர் 18 2022: இந்தியாவின் முன்னணி ஆயுள் காப்பீட்டு நிறுவனமான டாடா ஏஐஏ லைஃப் இன்சூரன்ஸ் (டாடா ஏஐஏ), அதன் ரைடர் பேக்கேஜ்களான வைட்டாலிட்டி ப்ரொடெக்ட் & வைட்டாலிட்டி ஹெல்த் மூலம் கிடைக்கும் தனித்துவமான ஆரோக்கியத் திட்டமான டாடா ஏஐஏ வைட்டலிட்டியை அறிமுகப்படுத்தியதன் மூலம் அதன் காப்பீட்டுத் தீர்வுகள் தொகுப்புகளை மேம்படுத்தியுள்ளது. இந்த வெளியீட்டின் மூலம், டாடா ஏஐஏ இந்தியாவில் உள்ள நுகர்வோருக்கு உலகளாவிய புகழ்பெற்ற வைட்டாலிட்டி தளத்தை அறிமுகப்படுத்துகிறது, இது ஏற்கனவே 40 நாடுகளில் கிடைக்கிறது மற்றும் கடந்த 25 ஆண்டுகளில் 30 மில்லியனுக்கும் அதிகமான தனிநபர்கள் பயனடைந்துள்ளனர். பயன்படுத்த எளிதான மொபைல் செயலியின் மூலம் அணுகி, டாடா ஏஐஏ இன் பாலிசிதாரர்கள் உடல்நலப்பரிசோதனைகளைப் பெறவும், ஆரோக்கியமான வாழ்க்கை முறையிலிருந்து பயனடைவதன் மூலம் ஆரோக்கிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் பயன்படுத்தலாம். இதனுடன் சேர்த்து, நுகர்வோர் தங்கள் பிரீமியங்களில் முன்கூட்டியே தள்ளுபடி மற்றும் புதுப்பித்தல் ஆகியவற்றைப் பெறுகின்றனர். டாடா ஏஐஏ வைட்டாலிட்டி வெல்னஸ் திட்டம், முழுமையான நல்வாழ்வை நோக்கி நுகர்வோர் அத்தியாவசிய நடவடிக்கைகளை எடுக்க உதவும் தரவு உந்துதல் பகுப்பாய்வுக் கருவிகளைப் பயன்படுத்துகிறது. மொபைல் பயன்பாடு அடிப்படையிலான இடைமுகம் மூன்று பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது:

மூ உங்கள் ஆரோக்கியத்தை அறிந்து கொள்ளுங்கள் - நுகர்வோர், அவர்களின் தற்போதைய உடல்நலம் மற்றும் ஆரோக்கிய நிலையை மதிப்பிட உதவுகிறது

மூ உங்கள் ஆரோக்கியத்தை மேம்படுத்துங்கள் - வாராந்திர சவால்கள் மற்றும் நுகர்வோர் தங்கள் மன, உடல் மற்றும் சமூக நல்வாழ்வை மேம்படுத்த பங்கேற்கக்கூடிய செயல்பாடுகளை உள்ளடக்கியது

மூ வெகுமதியைப் பெறுங்கள்- குறிப்பிட்ட ஆரோக்கிய எல்லைக்குறிகளை எட்டும்போது, □□ பிரீமியங்களில் தள்ளுபடியைப் பெற நுகர்வோருக்கு உதவுகிறது.

டாடா ஏஐஏவின் காப்பீட்டுத் திட்டங்களின் கால, சேமிப்பு மற்றும் ஓய்வுக்காலம் ஆகியவற்றில் கிடைக்கும் ரைடர்களை வாங்குவதன் மூலம் நுகர்வோர் இந்த முழுமையான ஆரோக்கிய தளத்தைப் பெறலாம். அடிப்படை காப்பீட்டுக் பாலிசியுடன் சிறிய கூடுதல் பிரீமியத்தைச் செலுத்துவதன் மூலம் ரைடர்கள் நுகர்வோருக்கு மதிப்புமிக்க நன்மைகளை வழங்குகிறார்கள். வைட்டாலிட்டி ப்ரொடெக்ட் ரைடர் ஆனது, நுகர்வோருக்கு அவர்களின் கால இன்சூரன்ஸ் காப்பீட்டை அதிகரிப்பதற்கான விருப்பத்தை வழங்குகிறது தவிர விபத்து மரணம், விபத்து மொத்த மற்றும் நிரந்தர இயலாமை போன்ற நிகழ்வுகளுக்கு எதிராக விரிவான காப்பீட்டை வழங்குகிறது. வைட்டாலிட்டி ஹெல்த்ரைடர், தீவிர நோய்க்கான காப்பீடு மற்றும் ஏதேனும் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டால் தினசரி பணம் போன்றவற்றை உள்ளடக்குகிறது.

நிகழ்ச்சியில் பேசிய டாடா ஏஐஏ லைஃப் இன்சூரன்ஸ் தலைவர் மற்றும் தலைமை விநியோக அதிகாரி வெங்கி ஐயர், "டாடா ஏஐஏவில், எங்களது நுகர்வோர் பீடிப்பின் மதிப்பால் நாங்கள் இயக்கப்படுகிறோம். நுகர்வோரின் மாறிவரும் தேவைகளுக்கு ஏற்ப நாங்கள் தொடர்ந்து வளர்ச்சியடைந்து புதுமையான மற்றும் நுகர்வோர் மையத் தீர்வுகளை அறிமுகப்படுத்துவதை உறுதிசெய்கிறோம். வைட்டாலிட்டி முன்மொழிவை அறிமுகப்படுத்துவது, பணம் செலுத்துபவரிலிருந்து கூட்டாளராக மாறுவதில் ஒரு குறிப்பிடத்தக்க படியாகும். எங்கள் முன்முயற்சி எங்கள் நுகர்வோருக்கு அவர்களின் ஆரோக்கியமான வாழ்க்கை முறையைப் பின்பற்றுவதற்கான வாய்ப்பை வழங்கும் மற்றும் எங்கள் பிற தீர்வுகளிலிருந்து அவர்கள் அனுபவிக்கும் கூடுதல் நன்மைகளை அவர்களுக்கு வழங்கும் என்று நாங்கள் நம்புகிறோம்." என்று கூறினார்.

இந்த அறிவிப்பு குறித்து வைட்டாலிட்டி குளோபலின் தலைமை நிர்வாக அதிகாரியான பேரி ஸ்வார்ட்ஸ்பெர்க் கூறுகையில், "வைட்டாலிட்டி திட்டத்தின் வரம்பை விரிவுபடுத்தவும், மில்லியன் கணக்கான மக்களை ஆரோக்கியமாக மாற்றும் அதன் திறனையும் டாடா ஏஐஏ உடன் இணைப்பதில் நாங்கள் மிகவும் பெருமைப்படுகிறோம். வைட்டாலிட்டி ஐ காப்பீட்டுக்கு இணைக்கும்



நாடுகளின் பட்டியலில், உலகம் முழுவதும் 40வது சந்தையாக இருப்பதை வெளிக்காட்டி, இந்தியாவும் இணைந்திருப்பது, எங்களுக்கு ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல் ஆகும்." என்று கூறினார்.

இந்த முயற்சியை தொடங்கிவைத்து, டாடா ஏஐஏ இன் பிராண்ட் அம்பாசிடர் நீரஜ் சோப்ரா, "ஆரோக்கியமாகவும் சுறுசுறுப்பாகவும் இருப்பதன் முக்கியத்துவத்தை போதுமான அளவு வலியுறுத்த முடியாது. ஆனால் ஆரோக்கியமாக இருப்பது என்பது வெறும் உடல் தகுதிக்கு அப்பாற்பட்டது மற்றும் மனநலம், ஊட்டச்சத்து மற்றும் சமூக உடற்தகுதி உள்ளிட்ட அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். இந்தியாவில் டாடா ஏஐஏ வைட்டாலிட்டியை அறிமுகப்படுத்தியதில் நான் ஒரு பகுதியாக இருப்பதில் பெருமிதம் கொள்கிறேன், ஏனெனில் இது ஆரோக்கியத்தை நாம் எப்படிப் பார்க்கிறோம் என்பதை மாற்றுவதில் எடுக்கப்பட்ட ஒரு குறிப்பிடத்தக்க நடவடிக்கை என்று நான் நம்புகிறேன். நல்ல ஆரோக்கியத்தை ஊக்குவிப்பதன் மூலம், டாடா ஏஐஏ வைட்டாலிட்டி இந்தியர்களின் சுகாதார நிலையை மாற்றுவதற்கு பங்களிக்கும்." என்று கூறினார்.

# மருத்துவ மாணவர்களுக்கு நற்செய்தி - உக்ரைனில் இருந்து இடம்பெயர்ந்த இந்திய மாணவர்களை உஸ்பெகிஸ்தான் வரவேற்கிறது : பீப்பிள்ஹைவ்

சென்னை, அக்டோபர் 18 2022: இந்தியாவுக்கான உஸ்பெகிஸ்தான் தூதரின் சமீபத்திய அறிவிப்பில், உக்ரைனில் உள்ள மருத்துவப் பல்கலைக்கழகங்களில் இருந்து இடம்பெயர்ந்த இந்திய மாணவர்களுக்கு, தனது நாடு இடங்களை வழங்கப் போவதாக அறிவிக்கப்பட்டது. 2,000 இடங்கள் வரை வழங்கல் இருக்கும் என்றும், இந்த இடங்களுக்கான சேர்க்கை இந்திய அரசின் தேசிய மருத்துவ ஆணையத்தின் வழிகாட்டுதல்களின் அடிப்படையில் நடைபெறும் என்றும் அவர் மேலும் கூறினார்.

குறிப்பாக உஸ்பெகிஸ்தானின் சமர்கண்டில் எஸ் சி ஓ உச்சிமாநாடு மற்றும் மாண்புமிகு பிரதமர் நரேந்திர மோடியின் வருகை ஆகியவற்றின் பின்னணியில், இரு நாடுகளுக்கும் இடையிலான உறவை மேலும் வலுப்படுத்தும் இந்திய-உஸ்பெக் ஒத்துழைப்பில் ஒரு முக்கிய படி. உஸ்பெகிஸ்தான் அரசாங்கத்தின் இந்த வெளிப்பாடு, பிரதமர் மோடியின் அரசாங்கத்தின் முற்போக்கான வெளியுறவுக் கொள்கையின் நேரடி விளைவாக இருக்கிறது.

இந்தியா பீப்பிள்ஹைவ் எல்எல்சியில் மாணவர் சேர்க்கைக்காக புதுதில்லியில் உள்ள புகாரா ஸ்டேட் மெடிக்கல் இன்ஸ்டிடியூட் பிரதிநிதிகளை, அவர்களது பிரத்யேக கூட்டாளருடன் சந்திக்கும் வாய்ப்பு எங்களுக்கு கிடைத்தது. பிரதிநிதிகள் குழுவை சர்வதேச துறையைச் சேர்ந்த டாக்டர் ஏஞ்சலா குர்போனோவா மற்றும் மெடிக்கல் பார் ரெக்ரூட்மென்ட் பீப்பிள்ஹைவ் எல்எல்சி இந்தியா ஆபீஸ் இன் இயக்குனர் வழக்கறிஞர் பர்மோத் ஜோஷி ஆகியோர் பிரதிநிதித்துவப்படுத்தினர். எங்கள் சந்திப்பின் போது, டாக்டர் ஏஞ்சலா குர்போனோவாவிடமிருந்து உக்ரேன் மாணவர்களுக்கான ஆட்சேர்ப்பு செயல்முறை தொடர்பான கூடுதல் தகவல்களைக் கண்டுபிடித்தோம். அவர் கூறினார், 'உக்ரைனில் இருந்து பி எஸ் எம் ஐ க்கு இடம்பெயர்ந்த மருத்துவ மாணவர்களை உஸ்பெகிஸ்தானுக்கு மாற்றுவதற்கு தேவையான தகுதிகளை அவர்கள் பூர்த்தி செய்தால் அவர்களை வரவேற்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். அவர்கள் எங்கள் கூட்டாளர்

பீப்பிள்ஹைவ் எல்எல்சி மூலம் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும்". வக்கீல் ஜோஷி, பீப்பிள்ஹைவ் எல்எல்சி மற்றும் ஒன் கன்சல்டிங் மற்றும் பிஎஸ்எம்ஐக்கு இடையேயான கல்விக் கட்டணத்தின் ஏற்றத்தாழ்வு குறித்து மேலும் கருத்து தெரிவித்தார். வழக்கறிஞர் பர்மோத் ஜோஷியின் கூற்றுப்படி உதவித்தொகை கிடைப்பதால் உக்ரைன் மாணவர்களுக்கு ஆண்டுக்கு அதிகபட்சமாக $3500 சிறப்புக் கட்டணம் உள்ளது.

உக்ரைன் மாணவர்களுக்கான சேர்க்கை செயல்முறை பற்றி டாக்டர் குர்போனோவாவிடம் கேட்டோம். யூ இசட் அரசாங்கத்தின் மினிஸ்ட்ரி ஆப் ஹையர் மெடிக்கல் ஹையர் எஜுகேஷனல் இன்ஸ்டிடியூட் இல் மிகவும் நெறிப்படுத்தப்பட்ட செயல்முறை உள்ளது. அனைத்து மாணவர்களும் கல்வி மதிப்பீட்டிற்காக தங்கள் கல்வி டிரான்ஸ்கிரிப்ட் / எலக்ட்ரானிக் ஜர்னல்களை சமர்ப்பிக்க வேண்டும். எங்கள் பாடத்திட்டத்துடன் பாடத்தின் அடிப்படையில் படிக்கப்படும் கிரெடிட் நேரங்கள், மணிநேரம் ஆகியவற்றைப் பொருத்துகிறோம். இதன் அடிப்படையில் விண்ணப்பதாரருக்கு சேர்க்கைக்கான ஆண்டு மற்றும் செமஸ்டர் ஆகியவற்றை வழங்குவோம். உக்ரைனில் எங்கள் பாடத்திட்டங்கள் வேறுபட்டதால், அதே ஆண்டு படிப்பை உங்களுக்கு உறுதியளிக்கும் முகவரை நம்ப வேண்டாம். நாங்கள் யூ இசட் இல் உள்ள எண் 2 அரசு நிறுவனமாக இருக்கிறோம். இடமாற்றங்களுக்கான அரசாங்க வழிகாட்டுதல்களை நாங்கள் பின்பற்றுகிறோம், இந்த வழிகாட்டுதல்களைப் பின்பற்றவில்லை என்றால், உங்களால் இறுதிப் பட்டத்தைப் பெற முடியாது. ஹைதராபாத் மற்றும் கேரளாவில் உள்ள பல பெற்றோரை தான் சந்தித்ததாக அவர் எங்களிடம் தெரிவித்தார், அதே ஆண்டு தவறான முறையில் சேர்க்கைக்கு உறுதியளிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் அவர்களுக்கு கல்விக் கட்டணம் மற்றும் பிற கட்டணங்கள் உயர்த்தப்பட்டுள்ளன. மேலும், உஸ்பெகிஸ்தான் மற்றும் இந்தியாவிலும் அலுவலகத்துடன் அமெரிக்காவை தளமாகக் கொண்ட உலகளாவிய கல்வி ஆலோசனை நிறுவனமான பீப்பிள்ஹைவ் எல்எல்சி, அனைத்து சேர்க்கைகளுக்கும் அவர்களின் அதிகாரப்பூர்வ பிரத்யேக பங்குதாரர் என்று அவர் பெற்றோரிடம் தெரிவித்தார்.